

எச்ஐவி தொற்று பாதித்த பெண் குழந்தையின் தந்தை விஸ்வநாதன் (இரண்டாவது இருப்பவர்) பேட்டி அளித்தார்.

### கோவை அரசு மருத்துவமனையில்

# 2 வயது பெண் குழந்தைக்கு எச்ஐவி ரத்தம் ஏற்றப்பட்டது

## தந்தை பரபரப்பு புகார்

**கோவை, பிப். 19-**
கோவை அரசு மருத்துவமனையில் 2 வயது பெண் குழந்தைக்கு எச்ஐவி ரத்தம் ஏற்றப்பட்டதாக தந்தை பரபரப்பு புகார் கூறினார்.

திருச்சியை சேர்ந்தவர் விஸ்வநாதன்(29). இவரது மனைவி சித்ரா(25). இவர்களுக்கு திருச்சி அரசு மருத்துவமனையில் கடந்த 2017 மார்ச் 6ம் தேதி ஆண், பெண் என இரட்டைக் குழந்தை பிறந்தது. இதில் ஆண் குழந்தை ஆரோக்கியமாக இருந்தது. பெண் குழந்தை மட்டும் 700 கிராம் மட்டுமே எடையிருந்ததால் தீவிர சிகிச்சையளித்தனர். இதில் 32 நாட்களுக்குப் பின் குழந்தையின் எடை 1400 கிராமாக அதிகரித்தது. இதன் பிறகு சிகிச்சை முடிந்து குழந்தையை பெற்றோர் வீட்டிற்கு அழைத்து சென்றனர்.

தொடர்ந்து விஸ்வநாதன் தன் குடும்பத்துடன் திருப்பூருக்கு இடம் பெயர்ந்து விசைத்தறி கூடத்தில் பணிபுரிந்து வந்தார். இந்த நிலையில் பெண் குழந்தைக்கு காய்ச்சல் ஏற்பட்டதால் கடந்த 11.7.18 அன்று திருப்பூர் அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு மருத்துவர்கள் பரிசோதித்து விட்டு இருதய நோய் இருப்பதாக கூறி அன்றே கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

பிறகு கோவை அரசு மருத்துவமனையில் குழந்தைக்கு சிகிச்சையளித்த மருத்துவர்கள் 12ம் தேதி இரவு ரத்தம் ஏற்றினர். சிகிச்சைக்கு பின்னர் குழந்தையுடன் பெற்றோர் 13ம் தேதி வீடு திரும்பினர்.

இந்த நிலையில் கடந்த 8ம் தேதி அந்த குழந்தையின் உடலில் கட்டிகள் ஏற்பட்டதால் கோவை அரசு மருத்துவமனையில் மீண்டும் அனுமதித்தனர். அங்கு ரத்தம் பரிசோதிக்கப்பட்டதில் குழந்தைக்கு எச்ஐவி பாதிப்பு இருப்பது தெரிந்தது. இந்த தகவல் குழந்தையின் பெற்றோரிடம் மருத்துவமனை சார்பில் கூறப்பட்டது. இதை கேட்ட குழந்தையின் பெற்றோர் அதிர்ச்சி அடைந்தனர்.

எங்கள் இருவருக்கும் எச்.ஐ.வி பாதிப்பு இல்லை. அப்படி இருக்கும்போது எங்கள் குழந்தைக்கு எப்படி எச்ஐவி பாதிப்பு ஏற்பட்டிருக்கும்? எனவே கோவை அரசு மருத்துவமனையில் குழந்தைக்கு ஏற்றப்பட்ட ரத்தத்தின் மூலமாகத்தான் எச்ஐவி பரவியிருக்கும் என்று அவர்கள் குற்றம் சாட்டினர். இதன் காரணமாக இன்று கோவை அரசு மருத்துவமனையில் பரபரப்பு நிலவியது. இதுகுறித்து குழந்தையின் தந்தை விஸ்வநாதன் இன்று நிருபர்களிடம் கூறியதாவது:

காய்ச்சல் காரணமாக கோவை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த என் பெண் குழந்தைக்கு கடந்த 12.7.2018 ரத்தம் ஏற்றினர். அதை பாதியிலேயே நிறுத்தி விட்டனர். இது குறித்து நர்சுகளிடம் கேட்டபோது, இது வயதானவரின் ரத்தம். மாற்றி ஏற்றி விட்டோம் என கூறினர். நாங்கள் காய்ச்சல் சிகிச்சைக்குதான் சேர்த்தோம். ஆனால் தொடர்ந்து அன்றே ஸ்கேன் செய்து குழந்தையின் இருதயத்தில் ஓட்டை உள்ளது. இருதய பிரச்னை உள்ளது. அதற்காகதான் ரத்தம் ஏற்றுகின்றனர் என தெரிவித்தனர். பிறகு சிகிச்சை முடிந்தாக கூறியதால் அன்றே வீடு திரும்பினோம்.

இந்த நிலையில் இம்மாதம் 8ம் தேதி குழந்தையின் உடலில் சிறு சிறு கட்டிகள் உருவானதையடுத்து மீண்டும் கோவை அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். அப்போது குழந்தையின் ரத்தத்தை பரிசோதித்து எச்ஐவி தொற்று உள்ளதாக கூறினர். மேலும் என்னையும், மனைவி, ஆண் குழந்தையையும் பரிசோதித்து எச்ஐவி தொற்று இல்லை என்பதை உறுதிசெய்தனர்.

திருப்பூர், திருச்சி, கோவை அரசு மருத்துவமனையை தவிர வேறு எந்த மருத்துவமனையிலும் இதுவரை குழந்தைக்கு சிகிச்சை அளிக்கவே இல்லை. திருப்பூர் துணை சுகாதார நிலையத்தில் மட்டும் ஒரு தடுப்பூசி போட்டுள்ளோம். கோவை அரசு மருத்துவமனையில் ரத்தம் ஏற்றியுள்ளதால் மட்டும் தான் என் குழந்தைக்கு எச்ஐவி தொற்று ஏற்பட்டுள்ளது.

இது குறித்து ரேஸ் கோர்ஸ் போலீஸ் ஸ்டேஷனில் புகார் தெரிவித்தபோது, வேறு எந்த மருத்துவமனையிலாவது சிகிச்சை பெற்றபோது வந்திருக்கும் என கூறி புகாரை பெற முடியாது என தெரிவித்து என்னை அனுப்பி விட்டனர். உரிய ஆதாரங்கள் இருப்பதால் இது குறித்து மக்கள் கண்காணிப்பகம் மற்றும் வக்கீல்கள் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பாதிக்கப்பட்ட என் குழந்தைக்கு உரிய சிகிச்சை அளிக்க வேண்டும். ஏற்கனவே சாத்தூரில் அரசு மருத்துவமனையில் கர்ப்பிணிக்கு எச்ஐவி ரத்தம் ஏற்றப்பட்டது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அரசு மருத்துவமனை ஊழியர்களின் அஜாக்கிரதையால் தான் இதுபோன்று ஏற்படுகிறது. எனவே இது குறித்து சிபிஐ அல்லது சிபிசிஐடி விசாரணை நடத்த வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். அப்போது மக்கள் கண்காணிப்பகம் ஒருங்கிணைப்பாளர் ஆசீர்வாதம், வக்கீல்கள் சாரதி நிகோலஸ் ஆகியோர் உடன் இருந்தனர்.

## கோவை அரசு மருத்துவமனை டீன் விளக்கம்



கோவை அரசு மருத்துவமனை டீன் அசோகன் நிருபர்களிடம் கூறியதாவது:

இந்த குழந்தை திருச்சி அரசு மருத்துவமனையில் பிறந்தபோது 700 கிராம் எடைதான் இருந்தது. பிறகு தீவிர சிகிச்சை பிரிவில் கண்காணித்து சிகிச்சை அளித்துள்ளனர். பிறகு பல்வேறு மருத்துவமனைகளில் குழந்தைக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் கடந்த ஆண்டு ஜூலை மாதம் 11ம் தேதி கோவை அரசு மருத்துவமனைக்கு குழந்தையை சிகிச்சைக்காக அழைத்து வந்தபோது சிகிச்சை அளிக்கப்பட்டது.

அப்போது குழந்தைக்கு பேக்ட் செல் (ரத்த அணுக்கள்) மட்டும் ஏற்றப்பட்டது. பிளாஸ்மா செல் மூலம்தான் எச்ஐவி தொற்று பரவும். பேக்ட் செல் மூலம் குழந்தைக்கு எச்ஐவி பரவ வாய்ப்பு இல்லை. பேக்ட் செல் ஏற்றப்பட்ட உறையின் சீரியல் எண்ணை மீண்டும் வேலூர் பரிசோதனை கூடத்திற்கும் அனுப்பி சோதனை செய்து விட்டோம். பேக்ட் செல் ரத்தம் அளித்த கொடையாளரிடமும் சோதனை செய்ததில் அவருக்கு எச்ஐவி தொற்று இல்லை என்பது நிருபணமாகியுள்ளது. தம்பதியினர் பல்வேறு மருத்துவமனைகளில் குழந்தைக்கு சிகிச்சை அளித்துள்ளதால் அங்கு வைத்து குழந்தைக்கு எச்ஐவி தொற்று பரவியிருக்கும். எச்ஐவியால் பாதித்துள்ள குழந்தைக்கு தற்போது ஏஆர்டி சிகிச்சை அளிக்கப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

தமிழ் முரசு
Tue, 19 February 2019
tm.dinakaran.com/c/36880620